**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

சர்வதேச அளவிலான சவால்களுக்கு நீடித்த தீர்வுகளை வழங்கி

# உலகை வழிநடத்த தயாராக உள்ளது இந்தியா

**ஆரோவில் நிகழ்வில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு உறுதி**

**விழுப்புரம்**

சர்வதேச அளவிலான சவால்களுக்கு நீடித்த தீர்வுகளை வழங்கி, உலகை வழிநடத்த இந்தியா தயாராக உள்ளது என்று ஆரோவில் சர்வதேச நகரில் நடந்த நிகழ்ச்சியில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுச்சேரிக்கு 2 நாள் பயணமாக வருகை தந்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு நேற்று, அரவிந்தர் ஆசிரமத்தில் வழிபாடு நடத்தினார். பின்னர் துணைநிலை ஆளுநர் தமிழிசையுடன் விழுப்புரம் மாவட்டம் ஆரோவில் சர்வதேச நகரத்துக்கு சென்றார். அவரை தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, அமைச்சர்கள் பொன்முடி, மஸ்தான், விழுப்புரம் ஆட்சியர் பழனி, எஸ்.பி. சஷாங்க் சாய், கூடுதல் ஆட்சியர் சித்ரா விஜயன், திண்டிவனம் சார் ஆட்சியர் கட்டா ரவி தேஜா உள்ளிட்டோர் வரவேற்றனர்.



ஆரோவில் சர்வதேச நகரில் நேற்று மரக்கன்று நடும் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு. உடன், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி, புதுச்சேரி துணைநிலை ஆளுநர் தமிழிசை, அமைச்சர்கள் பொன்முடி, மஸ்தான் உள்ளிட்டோர்.

**மாத்ரி மந்திரில் தியானம்**

ஆரோவில்லுக்கு வந்த குடியரசுத் தலைவர் அங்குள்ள மாத்ரி மந்திர் மையத்தில் அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்தார். பின்னர், தனது பயணத்தின் நினைவாக மரக்கன்று நட்டார். ஆரோவில்லின் சிறப்புகளை எடுத்துரைக்கும் கண்காட்சியை பார்வையிட்டார். குழு நடனத்தை கண்டு ரசித்தார்.

தொடர்ந்து நடைபெற்ற விழாவில் அவர் பேசியதாவது:

1990-களில் சுமார் 3 ஆண்டுகள் ராய்ரங்பூரில் உள்ள ஸ்ரீ அரவிந்தோ ஒருங்கிணைந்த கல்வி மையத்தில் கவுரவ ஆசிரியராக பணியாற்றும் பாக்கியம் எனக்கு கிடைத்தது. நான் அங்கு கற்பித்ததைவிட கற்றுக் கொண்டது அதிகம்.

அடுத்த வாரம் சுதந்திர தினம் கொண்டாடும் வேளையில், அரவிந்தரின் 150-வது பிறந்தநாளும் கொண்டாடப்படுவது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இந்தியாவின் சுதந்திரம் குறித்து, ஸ்ரீ அரவிந்தர் நாட்டுக்கும் மனித குலத்துக்கும் தனது கனவுகளை கோடிட்டுக் காட்டும் ஒரு முக்கியமான உரையை நிகழ்த்தினார்.

'இந்தியாவின் ஆன்மிகத்தை உலகுக்கு கடத்த வேண்டும்' என்று கனவு கண்டார். 'உலகமே இந்தியாவை நோக்கி நம்பிக்கையுடன் திரும்புகிறது' என்று எழுதினார். இன்றைய உலகில் இந்தியா உயர்ந்த இடத்தை அடைந்துள்ளது. 'ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரு எதிர்காலம்' என்று அரவிந்தர் கூறியது, இன்று பிரதிபலிக்கிறது.

இன்றைய உலகத்தில் ஒற்றுமை, அமைதி, நல்லிணக்கம் போன்ற கருத்துகளை நாம் ஆழமாக புரிந்து கொள்ள வேண்டும். இந்த கருத்துகள் மனிதர்களை மட்டுமல்ல, அனைத்து உயிரினங்கள், இயற்கை மற்றும் முழு பிரபஞ்சத்தையும் உள்ளடக்கியது.

ஆரோவில் உண்மையில் மனித ஒற்றுமை மற்றும் ஆன்மிக பரிணாமத்தை வைக்குவிப்பதில் தனித்துவமாக விளங்குகிறது. இந்த உலகளாவிய நகரத்தை 2 பெரிய ஆத்மாக்கள் அமைத்தன. மனிதனை, தெய்வீக மனிதர்களாக மாற்ற 'சூப்பர்-மைண்ட்' உதவும் என்று ஸ்ரீ அரவிந்தர் நம்பினார். இந்த உலகை தெய்வீகமாக ஆக்கும் வல்லமை அதிக மன உணர்வுக்கு உண்டு என்ற தத்துவத்தை அவர் வழங்கினார். ஆரோவில்லில் பின்பற்றப்படும் ஆன்மிக நோக்கங்கள் முழு மனிதகுலத்தின் நலனுக்காகவே உள்ளன.

அரவிந்தரால் முன்வைக்கப்பட்ட ஒரு பிரபஞ்சம் உலகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு மிகவும் பொருத்தமானது என்று நினைக்கிறேன். 'காஸ்மிக்' கருத்தை புரிந்து கொள்வதன் மூலமும், ஏற்றுக்கொள்வதன் மூலமும் இன்று உலகம் எதிர்கொள்ளும் பல பிரச்சினைகளை இணக்கத்துடன் தீர்க்க முடியும்.

சர்வதேச அளவிலான சவால்களுக்கு நீடித்த தீர்வுகளை வழங்குவதில் உலகை வழி நடத்த இந்தியா தயாராக உள்ளது. இந்த முயற்சியில் ஆரோவில் பெரும் பங்களிப்பை வழங்க முடியும்.

இவ்வாறு அவர் பேசினார்.

குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, ஹெலிகாப்டரில் சென்னைக்கு சென்றார்.

**டெல்லி திரும்பினார் முர்மு**

4 நாள் பயணமாக கடந்த 5-ம் தேதி தமிழகம் வந்த குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, 6-ம் தேதி சென்னை பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா, ராஜ்பவன் தர்பார் அரங்குக்கு பாரதியார் பெயர் சூட்டுதல் ஆகிய விழாக்களில் பங்கேற்றார். பின்னர் புதுச்சேரி சென்ற அவர், நேற்று மாலை மீண்டும் சென்னை திரும்பினார்.

சென்னை விமான நிலையத்தில் இருந்து டெல்லி புறப்பட்ட குடியரசுத் தலைவர் முர்முவை, ஆளுநர் ஆர்.என்.ரவி, முதல்வர் மு.க.ஸ்டாலின், அமைச்சர்கள் துரைமுருகன், ஐ.பெரியசாமி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், தங்கம் தென்னரசு, தா.மோ.அன்பரசன், சென்னை மேயர் பிரியா, தலைமைச் செயலர் சிவ்தாஸ் மீனா, முப்படை அதிகாரிகள், சென்னை காவல் ஆணையர் வழியனுப்பி வைத்தனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

### தமிழ்நாடு வனம் மற்றும்

# வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு

## முதல்வர் ஸ்டாலின் தொடங்கிவைத்து இலச்சினையை வெளியிட்டார்

**சென்னை**
தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவை தொடங்கி வைத்து, இலச்சினையை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

வனத் துறையின் 2021-22-ம் ஆண்டு மானியக் கோரிக்கையில், மாநில அளவில் திட்டமிடப்பட்ட வன உயிரின குற்றங்களைக் கண்டறிந்து தடுக்க வனம் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அதன்படி, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டுப் பிரிவு சென்னை சைதாப்பேட்டையில் உள்ள பனகல் மாளிகையில் நிறுவப்பட்டது. அப்பிரிவை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

திட்டமிட்ட வனம் மற்றும் வன உயிரின குற்றங்களைத் தடுக்கும் வகையில் பிரத்யேகமாக ஏற்படுத்தப்பட்டுள்ள இப்பிரிவு, வன உயிரினக் குற்றங்கள் குறித்த தகவல் மற்றும் நுண்ணறிவு விவரங்களை சேகரித்தல், சட்டவிரோதமாக வன உயிரினங்கள் மற்றும் வன உயிரினப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுத்தல், உலகளாவிய அமைப்புகளுடன் ஒன்றிணைந்து செயல்படுதல் ஆகியவற்றை முக்கிய குறிக்கோள்களாகக் கொண்டு செயல்படுகிறது.

**வழிகாட்டு நெறிமுறைகள்**

மேலும், வன உயிரின குற்றங்கள் தொடர்பான நிலையான வழிகாட்டு நெறிமுறைகளை ஏற்படுத்துதல், வனங்களை ஒட்டி வாழும் பகுதிகளில் உள்ள மக்களிடையே தகவல் கட்டமைப்பை மேம்படுத்துதல், வன உயிரினக் குற்றங்கள் சார்ந்த தரவுகளை சேகரித்தல் மற்றும் வன உயிரினக் குற்றங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ள இடங்களை வரைபடமாக தயாரித்தல் ஆகியவை இப்பிரிவின் முக்கிய செயல்பாடுகள் ஆகும்.

**118 முன்கள வனப்பணியாளர்கள்**

இப்பிரிவின் தலைமையகம் சென்னை, சைதாப்பேட்டை, பனகல் மாளிகையில் அமைக்கப்பட்டு, இயக்குநரை தலைவராகவும், சென்னை, கோயம்புத்தூர், மதுரை மற்றும் ராமநாதபுரம் ஆகிய 4 மண்டலங்களில் துணை இயக்குநர்களின் தலைமையிலும் செயல்பட்டு வருகிறது. மேலும், இந்தப் பிரிவில் 118 முன்கள வனப்பணியாளர்கள் தற்போது பணியாற்றி வருகின்றனர்.

இப்பிரிவின் வாயிலாக 190-க்கும் அதிகமான வன உயிரினக் குற்றங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதில் யானை தந்தங்கள் மற்றும் யானைத் தந்தத்தினாலான பொருட்களை விற்பனை செய்தல், புலித்தோல் மற்றும் அதன் பாகங்களை சட்டவிரோதமாக விற்பனை செய்தல், சட்டவிரோதமாக பாம்புகள், கிளிகள், கடல் சங்குகள், கடல் அட்டைகள் ஆகியவை வைத்திருந்த குற்றங்கள் என 50-க்கும் மேற்பட்ட வனக்குற்றங்களில் குற்றவாளிகள் கைது செய்யப்பட்டு அவர்களிடமிருந்து வன உயிரினப் பொருட்களைப் பறிமுதல் செய்து வழக்கு பதிவு செய்யப்பட்டு மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் அமைச்சர் மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ்தாஸ்மீனா, வனத்துறைசெயலர் சுப்ரியா சாஹு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் மற்றும் மற்றும் முதன்மை வன உயிரினக் காப்பாளர் ஸ்ரீனிவாச ஆர். ரெட்டி, தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றக்கட்டுப்பாட்டுப் பிரிவு முதன்மை தலைமை வனப்பாதுகாவலர் ஆகாஷ் தீப் பருவா, புலிகள் திட்டம், வன உயிரின குற்றக்கட்டுப்பாட்டு பிரிவு இயக்குநர் காஞ்சனா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இன்று (ஆக.9) உலக பழங்குடிகள் தினம்

# புதுப்பொலிவு பெறுமா பழங்குடியினர் வாழ்வு?

ஒய். ஆண்டனி செல்வராஜ்



● மதுரை

தொல்குடிகளான பழங்குடியின மக்களின் மொழி, பண்பாடு, வாழ்வியல், வாழ்வாதார உரிமைகள் அழியாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற உயரிய நோக்கில் ஐக்கிய நாடுகள் சபை ஆண்டுதோறும் ஆகஸ்ட் 9-ம் தேதியை உலக பழங்குடிகள் தினமாகக் கொண்டாடி வருகிறது.

அதன்படி, ஒவ்வொரு ஆண்டும் உலகெங்கிலும் உள்ள பழங்குடி மக்களின் முன்னேற்றத்துக்கான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இந்த ஆண்டு 'தன்னுரிமை மாற்றத்தின் முகவர்களாக பழங்குடி இளைஞர்கள்' என்னும் முழக்கத்தோடு ஐ.நா. சபை களமிறங்கியுள்ளது.



பேராசிரியர் ஒ.முத்தையா

தொல்குடிகள், முதுகுடிகள், ஆதிகுடிகள், பழங்குடிகள், திணைக்குடிகள், பூர்வீகக் குடிகள் என்றெல்லாம் அறியப்படும் இவர்கள், உலகளாவிய நிலையில் 370 மில்லியன் பேர் வாழ்ந்து வருகின்றனர்.

உலக மக்கள் தொகையில் இது மிகவும் சொற்பம் (5 சத விதம்) என்றாலும் 7000-க்கும் அதிகமான மொழிகள், 5000-க்கும் மேற்பட்ட பண்பாட்டு நடத்தைகளை கொண்டவர்களாக உள்ளனர். இந்தியாவில் 702 பழங்குடி இனங்கள் அடர்ந்த மலைகள், வனங்கள், சமவெளிகள், தீவுகளில் பழங்காலத் தன்மை மாறாமல் வாழ்ந்து வருகின்றனர்.

இதுகுறித்து காந்திகிராம பல்கலைக்கழக தமிழ்த்துறை தலைவரும், பேராசிரியருமான ஒ.முத்தையா கூறியதாவது:

1961-ல் நடந்த கணக்கெடுப்பில் நாட்டில் 1,100 மொழிகள் இருந்தன. 2001-ல் அது 850-ஆகக் குறைந்து 250-க்கும் மேற்பட்ட மொழிகள் மறைந்தே போயின. பல்வேறு பழங்குடியின மொழிகள் அழிவை நோக்கி செல்கின்றன. பழங்குடிகள் பலர் தங்களது தாய் மொழியைவிட்டு, பிழைப்பு தேடிப் பொது மொழியை நாடிச் செல்வதும் அவர்களது பாரம்பரிய மொழியின் அழிவுக்கு காரணம்.

மொழிகள் பேச்சுக்காக மட்டும் அல்ல. அதில் தொல்லியல் அடையாளங்களும், பாரம்பரிய அறிவு முறைகளும், சடங்குகளும், பண்பாட்டுக் கூறுகளும் அடங்கியுள்ளன.

தமிழகத்தில் தோடர், கோத்தர், இருளர், கசவர், முள்ளுக் குரும்பர், பொட்டக் குறும்பர், பணியர், காட்டு நாயக்கர், பளியர், குறவர், மலை மலசர், மலைவேடர், காணிக்காரர், மலையாளி, காடர், முதுவர் என்று 36 வகையான பழங்குடியினத்தவர் வசிக்கின்றனர். நீலகிரியில் மட்டும் 7 வகையான பழங்குடியினர் உள்ளனர்.

சமீபத்தில் நரிக்குறவர்கள் 37-ஆவதாகப் பழங்குடிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டனர்.

நீலகிரியில் வாழும் தோடர்கள், இயற்கையை வர்ணித்துப் பாடுவதில் வல்லவர்கள். அவர்களின் இசை மொழி தனித்துவமானது. தோடர்களின் கைத்திறனில் உருவாக்கப்படும் 'பூத்குளி' என்ற ஆடைக்கு மத்திய அரசின் புவிசார் குறியீடு அங்கீகாரமும் கிடைத்துள்ளது. கோத்தர் இன மக்கள் கைவினைத் தொழில்கள் மற்றும் இசைக்கருவிகளை இசைப்பதில் திறமையானவர்கள்.

இருளர்கள் பாம்புகளைக் கையாள்வதில் புகழ் பெற்றவர்கள். ஆனைமலைக் காடர்கள் யானைகளின் போக்குகளை அறிவதில் வல்லவர்கள். பழநி மலையில் வாழும் பளியர்கள் மலைத்தேன் எடுப்பதில் கைதேர்ந்தவர்கள். கொல்லிமலை மலையாளிகள் மரபுவழி வேளாண்மையில் திறன் உடையவர்கள். பொதிகை மலையில் வாழும் காணிக்காரர்களின் மாந்திரீக மருத்துவம், பணியர்களின் ஒப்பனை போன்றவை தனித்துவமானவை.

இயற்கை சார்ந்த அறிவு, பருவ நிலை மாற்றங்கள் குறித்த தெளிவு என்று ஒவ்வொரு பழங்குடியும் ஒவ்வொரு விதமான தனித்திறன் பெற்றுள்ளனர். பாரம்பரிய வாழ்க்கை முறைகளை தொடர்ந்து பின்பற்றியும் வருகின்றனர்.

### பட்டியல் இனத்தில் சேர்க்க போராட்டம்

1976-ல் அரசின் பட்டியல் இன மறுசீரமைப்பில் பல பழங்குடியினர் பட்டியலில் இருந்தே நீக்கப்பட்டனர். அவர்கள் மீண்டும் தங்களை பட்டியல் இனத்தில் சேர்க்க போராடி வருகின்றனர்.

பழங்குடிகளுக்கு மலைதான் தாய்மடி. பட்டா வீடு, நிலம், வனப்பொருள் சேகரிப்பு உரிமை, வனத்தை பாதுகாக்க இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு, பெண்களுக்கான பாதுகாப்பு போன்ற கோரிக்கைகளை பழங்குடிகள் நீண்ட காலமாக வலியுறுத்தி வருகின்றனர். குடியரசுத் தலைவர் பழங்குடி இனத்தை சேர்ந்தவர் என்பதால் அவரது பார்வை தங்கள் மீது படும் என்ற நம்பிக்கையும் அம்மக்களிடையே உள்ளது.

பழங்குடி இளைஞர்களை ஒருங்கிணைத்து இந்த ஆண்டு மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் அம்மக்களின் வாழ்வில் புதுப்பொலிவை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### விரைவில் 6 ஆயிரம் மீனவப் பெண்களுக்கு 'டேப்'

# சிறுதானிய மகத்துவத்தை அனைவரும் அறிய வேண்டும்

## எம்எஸ்எஸ்ஆர்எப் தலைவர் சவுமியா சுவாமிநாதன் வலியுறுத்தல்

**சென்னை**

சிறுதானியத்தின் மகத்துவத்தை அனைவரும் அறியும்படி செய்ய வேண்டும் என எம்எஸ்சுவாமி நாதன் ஆராய்ச்சி அறக்கட்டளைத் (எம்எஸ் எஸ்ஆர்எப்) தலைவர் சவுமியா சுவாமி நாதன் வலியுறுத்தியுள்ளார்.

எம்எஸ் சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் கடந்த 6-ம் தேதி தொடங்கிய சர்வதேச சிறுதானிய மாநாட்டின் நிறைவு விழா, சென்னை, தரமணியில் உள்ள அறக்கட்டளை வளாகத்தில் நேற்று நடந்தது.

### வருமானம் அதிகரிப்பு

நிகழ்வில், சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற ஒடிசா மாநில வேளாண் துறைச் செயலர் அரபிந்த பாதே பேசும் போது, "சிறு விவசாயிகளுக்கும், மானாவாரி விவசாயம் செய்வோரும் சிறுதானியங்களைப் பயிரிடுவதன் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும். எனவே, கொள்முதல், நுகர்வு போன்றவற்றில் சிறுதானியங்கள் இடம்பெறும் வகையில் அடுத்த 6 ஆண்டுகளுக்கு ஒடிசா சிறுதானிய திட்டத்தை நீட்டித்துள்ளோம்" என்றார்.

### ஊட்டச் சத்து நிறைந்தது

அறக்கட்டளைத் தலைவர் சவுமியா சுவாமிநாதன் கூறும் போது, "நமது அன்றாட ஊட்டச் சத்துக்கு சிறுதானியங்கள் மிகவும் இன்றியமையாதது. சர்வதேச சிறுதானிய ஆண்டாக கொண்டாடப்படும் நடப்பாண்டு முடிந்தாலும், வரும் ஆண்டுகளிலும் சிறுதானியத்தின் மகத்துவத்தை அனைவரும் அறியும்படி செய்ய வேண்டும்" என்றார்.

முன்னதாக, உமன் கனெக்ட் சேலஞ்ச் என்ற சிறப்பு திட்டம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் நாகப்பட்டினம், மயிலாடுதுறை, கடலூர், ராமநாதபுரம், காரைக்கால் ஆகிய மாவட்டங்களில் உள்ள 100 கிராமங்களைச் சேர்ந்த 6 ஆயிரம் மீனவப் பெண்கள் பயனடைய உள்ளனர்.

அவர்களுக்கு தகவல் தொடர்பு தொழில்நுட்பம் குறித்த பயிற்சி வழங்கப்படவுள்ளது. இதன் தொடக்கமாக 5 பேருக்கு நேற்றைய தினம் 'டேப்' வழங்கப்பட்டது. இந்த திட்டத்தை பூம்புகாரில் உள்ள எம்எஸ்எஸ்ஆர்எப் மையம் முன்னெடுக்கவுள்ளது.

### வுமன் கனெக்ட் சேலஞ்ச்

இந்த மையத்துக்கு ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் யுஎஸ்எய்ட் சார்பில் வுமன் கனெக்ட் சேலஞ்ச் என்ற விருது வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

EVA STALIN IAS

**தமிழக அரசின் பாதுகாப்பு நடவடிக்கைகளால் 6 ஆண்டுகளில்**

# யானைகள் எண்ணிக்கை 2,961 ஆக உயர்வு

## ● கணக்கெடுப்பு அறிக்கையை வெளியிட்டார் முதல்வர்

● **சென்னை**

ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு அறிக்கையை முதல்வர் ஸ்டாலின் வெளியிட்டார். அரசின் பல்வேறு நடவடிக்கைகளால் தமிழகத்தில் யானைகள் எண்ணிக்கை கடந்த 6 ஆண்டுகளில் 2,761-ல் இருந்து 2,961 ஆக அதிகரித்துள்ளது.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு:

கேரள, கர்நாடக அரசுகளின் ஒத்துழைப்புடன் ஒருங்கிணைந்த யானைகள்கணக்கெடுப்பைதமிழக வனத் துறை கடந்த மே 17 முதல் 19-ம் தேதி வரை நடத்தியது. மத்திய சுற்றுச்சூழல், வனத் துறை அமைச்சகத்தின்கீழ் உள்ள யானைகள் திட்ட இயக்குநரகத்தின் பரிந்துரைப்படி, நேரடி, மறைமுக முறைகளை பயன்படுத்தி யானைகளின் எண்ணிக்கையை கணக்கிடுவது, தமிழகத்தின் 26 வனக் கோட்டங்களில் நடைபெற்றது.

அதன்படி, தமிழகத்தில் கடந்த 2017-ல் 2,761 ஆக இருந்த யானைகள் எண்ணிக்கை தற்போது 2,961 ஆக அதிகரித்துள்ளது. தமிழகத்தின் 4 பிற காப்பகங்களைவிட நீலகிரி கிழக்கு தொடர்ச்சி மலை யானைகள் காப்பகம் அதிக எண்ணிக்கையில், அதாவது 2,477 யானைகளை கொண்டுள்ளது. ஆண் யானை, பெண் யானை விகிதம் 1:2.17 என உள்ளது. கிழக்கு தொடர்ச்சி மலைகளில் 1,105 யானைகள், மேற்கு தொடர்ச்சி மலைகளில் 1,855 யானைகள் உள்ளன.

புலிகள் காப்பகங்களை பொருத்தவரை, முதுமலை காப்பகத்தில் ஊட்டி கோட்டம் - 444, மசினகுடி- 346, சத்தியமங்கலம் காப்பகத்தில் சத்தியமங்கலம்- 396, ஆசனூர்- 272, ஆனைமலை புலிகள் காப்பகத்தில் 211 என மொத்தம் 1,669 யானைகள் உள்ளன.

மே 12 முதல் 16-ம் தேதி வரை பல்வேறு யானை சரகங்களில் 1,731 துறை பணியாளர்கள், 368 தன்னார்வலர்கள் என மொத்தம் 2,099 பேர் கணக்கெடுப்பில் ஈடுபடுத்தப்பட்டனர். 3,496 சதுர கி.மீ. பரப்பளவிலான 690 பிளாக்குகளில் கணக்கெடுப்பு நடந்தது. ஒவ்வொரு 5 சதுர கி.மீ. பரப்பும் பல சிறு பிளாக்குகளாக பிரிக்கப்பட்டு, மே 17-ம் தேதி கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. 18-ம் தேதி யானை பிண்டம் கணக்கெடுப்பும், 19-ம் தேதி 26 வனக் கோட்டங்களில் நீர்க்குமிழிகள் முறை மூலமாகவும் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது.

தமிழக அரசு மேற்கொண்ட பல்வேறு வன உயிரின பாதுகாப்பு நடவடிக்கைகள், குறிப்பாக யானைகள் பாதுகாப்பு இயக்கம் மூலம் மேற்கொண்ட நடவடிக்கைகளால் தமிழகத்தில் யானைகள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அகத்தியமலை யானைகள் காப்பகம், தமிழ்நாடு யானைகள் பாதுகாப்பு இயக்கம், யானைகள் வாழிடங்களை பாதுகாத்தல், மேம்படுத்துதல் போன்ற தமிழக அரசின் நடவடிக்கைகளும் இதற்கு காரணம்.

இந்நிலையில், 'ஒருங்கிணைந்த யானைகள் கணக்கெடுப்பு - 2023' அறிக்கையை முதல்வர் ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று வெளியிட்டார்.

இந்த நிகழ்ச்சியில், வனத் துறை அமைச்சர் மதிவேந்தன், தலைமைச் செயலர் சிவ்தாஸ்மீனா, வனத் துறை செயலர் சுப்ரியா சாகு, முதன்மை தலைமை வனப் பாதுகாவலர்- தலைமை வன உயிரின காப்பாளர் ஸ்ரீனிவாச ரா.ரெட்டி, முதுமலை புலிகள் காப்பக இயக்குநர் டி.வெங்கடேஷ் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.



# வன உரிமைச் சட்டம் சாதித்தது என்ன?



பெ.சண்முகம்
மாநிலத் துணைத் தலைவர்
தமிழ்நாடு மலைவாழ் மக்கள் சங்கம்.
தொடர்புக்கு: pstribal@gmail.com

ஐக்கிய நாடுகள் அவை, ஆகஸ்ட் 9ஐ தொல்பழங்குடிகளின் (indigenous people) உரிமைகள் நாளாக 2007இல் அறிவித்தது. அது முதல் ஆண்டுதோறும் உலகம் முழுவதும் பழங்குடி மக்களின் அனைத்துப் பிரிவினரும் உரிமைகளை வலியுறுத்தும் பேரணிகள், கருத்தரங்குகள், கூட்டங்கள், கலாச்சாரக் கொண்டாட்டங்கள் என இந்த நாளைப் பல்வேறு வடிவங்களில் கொண்டாடிவருகின்றனர். பல்வேறு நிகழ்ச்சிகள் மூலம் அரசும் இந்நாளை ஒரு சடங்காகக் கடைப்பிடித்துவருகிறது.

பழங்குடிகள், வனத்தைச் சார்ந்து வாழும் இதர சமூகத்தினருக்குக் காடுகளின் மீதான உரிமைகளை அங்கீகரிக்கும் சட்டம், 2006 டிசம்பர் 15 அன்று நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது; இதற்கான விதிகள் 2008 ஜனவரி 1 முதல் நடைமுறைக்கு வந்தன. சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு 15 ஆண்டுகள் கடந்துவிட்ட பிறகும், அது முழுமையாக மக்களைச் சென்றடையவில்லை.

**மறுக்கப்படும் உரிமைகள்:** வன உரிமைச் சட்டப்படி, நில உரிமை, குடியிருப்பு உரிமை கோரி 2023 மார்ச் 31 வரை நாடு முழுவதும் வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 43,64,312; சமூக உரிமை கோரி வந்த விண்ணப்பங்களின் எண்ணிக்கை 1,80,574. இதில், தனிப்பட்ட குடும்பங்களுக்கு உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டது 21,99,012; சமூக உரிமை வழங்கப்பட்டது 1,08,700. தமிழ்நாட்டில் தனி உரிமை கோரி வந்த விண்ணப்பங்கள் 34,877; சமூக உரிமை கோரி வந்த விண்ணப்பங்கள் 2,584. இதில், தனிப்பட்ட குடும்பங்களுக்கு உரிமைச் சான்றிதழ் வழங்கப்பட்டது 10,536; சமூக உரிமைகள் அங்கீகாரம் வழங்கப்பட்டது 531. தமிழ்நாட்டில் உரிமைகள் வழங்கப்பட்ட மனுக்களைவிடத் தள்ளுபடி செய்யப்பட்டவைதான் அதிகம் (13,841). சமூக உரிமைகள் கோரியதில் தள்ளுபடி செய்யப்பட்டவை 1,008. இப்படிச் செய்வது சட்டத்தின் நோக்கத்துக்கு நேரெதிரானது.

வனத் துறை அதிகாரிகள் ஒத்துழைப்பதில்லை என்பது மாநிலம் முழுவதும் உள்ள புகாராக இருக்கிறது. ஆனால், நிலங்களை அளவீடு செய்வதற்குப் போதுமான அளவு நில அளவையாளர்கள் இல்லை என்பதால் காலதாமதம் ஏற்படுவதாக அதிகாரிகள் தரப்பில் சொல்லப்படுகிறது. அரசு நினைத்தால் இவற்றை உடனடியாகச் சரிசெய்ய முடியும்.

**சென்றடைய முடியாத தொலைவுகள்:** இச்சட்டத்தின் மற்றொரு முக்கிய அம்சம், சமூக உரிமைகள் குறித்தானது. திருப்பூர் மாவட்டம் திருமூர்த்திமலைப் பகுதியில் வாழும் ஒருவர் சமீபத்தில் உடல்நலம் பாதிக்கப்பட்டார். சாலை வசதி இல்லாத காரணத்தால், தூளிகட்டி தூக்கிவந்து மருத்துவமனையில் சேர்ப்பதற்குள் இறந்துவிட்டார். அதேபோல், வேலூர் மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியில் வசித்த ஒருவர், சாலை வசதி இல்லாத காரணத்தால் சிகிச்சைக்குத் தூக்கிச் செல்லப்பட்டபோது வழியிலேயே இறந்துவிட்டார். திருவண்ணாமலை மாவட்டம் ஜவ்வாது மலைப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி மருத்துவமனையில் இறந்த நிலையில், அவரது சடலத்தை ஆம்புலன்ஸ் ஓட்டுநர் மலையடிவாரத்தில் இறக்கிவிட்டுவிட்டார். பிறகு, மூங்கிலில் தொட்டில் கட்டி, 10 கி.மீ. தூரத்துக்கு அவருடைய உறவினர்கள் சடலத்தைச் சுமந்துசென்றனர்.

சுற்றுலாத் தலமாக வளர்ச்சியடைந்த மலைப் பகுதிகளுக்கு அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதில் ஆட்சியாளர்கள் அதிக அக்கறை செலுத்துகின்றனர். சுற்றுலா மேம்பட வேண்டும் என்பதில் மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், சுதந்திரம் பெற்று 75 ஆண்டுகளுக்குப் பிறகும், பழங்குடி மக்கள் வாழும் கிராமங்களுக்கு அடிப்படை வசதிகள் சென்றடையவில்லை என்பது கசப்பான உண்மை. வன உரிமைச் சட்டம் 2006இன் பிரிவு 2, அடிப்படைக் கட்டமைப்புகளுக்காக (ஒரு ஹெக்டேருக்குக் குறைவாக) காட்டு நிலங்களை ஒதுக்க வேண்டும் என்கிறது. கிராம சபையின் பரிந்துரையின் பெயரிலேயே அதற்கு ஒப்புதல் வழங்க வேண்டும். மரங்கள் வெட்டப்பட வேண்டியிருந்தால் ஒரு ஹெக்டேருக்கு, 75–க்கு மிகாத மரங்களாக இருக்க வேண்டும்.

**மனம் இல்லா அரசு:** இச்சட்டம் வருவதற்கு முன்பு, மேற்படி பணிகளுக்கு வனத் துறையினரிடம் விண்ணப்பித்து டெல்லியிலிருந்துதான் அனுமதி வர வேண்டும் என்ற நிலை இருந்தது. ஆனால், வன உரிமைச் சட்டம் 2006, கிராம சபைத் தீர்மானம் நிறைவேற்றி, கோட்ட அளவிலான வன உரிமைக் குழுவும் மாவட்ட அளவிலான வன உரிமைக் குழுவும் ஒப்புதல் வழங்கினாலே போதும். அப்படியிருந்தும் இந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் பழங்குடி மக்களைச் சென்றடையாததற்குக் காரணம், ஆட்சியாளர்களின் அலட்சியமும் அக்கறையற்ற போக்கும் அன்றி வேறு என்னவாக இருக்க முடியும்? முன்பு மத்திய அரசு அனுமதி தர மறுக்கிறது என்று பழியைத் தூக்கிப்போட ஒரு இடமிருந்தது. இப்போது மாநில அரசுக்கு மனம் இல்லை என்பதைத் தவிர வேறு எதையும் காரணமாகக் கூற முடியாது.

அதேபோல், பழங்குடிகளுக்கான வன உரிமைகள் என்று பாரம்பரிய மேய்ச்சல் நிலங்கள், கிழங்குகள், தீவனம் போன்றவற்றைச் சேகரிக்கும் பகுதிகள், உண்ணக்கூடிய காட்டுப்பழங்கள், சிறு வனப் பொருட்கள், மீன்பிடிப் பகுதிகள், நீர்பாசன அமைப்புகள், மனிதருக்கும் கால்நடைகளுக்குமான நீர்நிலைகள், மூலிகை மருத்துவர் மருத்துவப் பயனுடைய செடிகள் சேகரிக்கும் இடங்கள் ஆகியவை குறித்து விதிகள் 13, 2(ஆ)-இல் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்பகுதியில் குறிப்பிட்டுள்ள பழங்குடிகள் வாழும் பகுதிகளில் அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதாக இருந்தாலும் அல்லது வன உரிமைகள் என்று பட்டியலிடப்பட்டுள்ளதாக இருந்தாலும் இவற்றை நிராகரிப்பதற்கான மிகக் குறைந்த அளவு நியாயம்கூடக் கிடையாது. பிறகு, எதன் அடிப்படையில் சமூகத்துக்கான உரிமை கோரிய மனுக்களில் பெரும் பகுதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன?

தங்களது மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது என்பதுகூட மனு அளித்த குடும்பத்துக்கோ அந்தக் கிராமத்துக்கோ தெரியாது என்பதே நிதர்சனம். அனைவரின் கோரிக்கைகளையும் சட்டத்தின் நோக்கங்களை மனதில் கொண்டு சரிபார்க்க வேண்டும் என்று சட்டத்துக்கான விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அந்த அடிப்படையில் மனுக்கள் பரிசீலிக்கப்படுகின்றனவா என்பது சந்தேகம்தான்.

**வெற்றுப் புகழ்ச்சியைத் தாண்டி:** பழங்குடிகள் நாளில் அம்மக்களுடன் ஆடிப் பாடுவது, அவர்களைப் பற்றிப் புகழ்ந்து பேசுவது, ஆட்சியாளர்கள் ஏற்கெனவே செய்தவற்றை எடுத்துச் சொல்வது ஆகியவற்றைத் தாண்டி, சட்டப்படி அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகளை வழங்குவதும் அவர்களின் முன்னேற்றத்துக்கான நிரந்தரமான திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்துவதும் முக்கியம். பழங்குடிகளுக்கு இந்திய அரசமைப்பு வழங்கியுள்ள பிரத்யேகமான உரிமைகள், ஒடுக்குமுறைகளிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள், பழங்குடியினர் ஆணையங்கள், அமைச்சகங்கள் எல்லாம் இருந்தும் அவை எதுவும் அம்மக்களுக்குப் பாதுகாப்பான உணர்வைத் தந்துவிடவில்லை. மாறாக, பழங்குடிகள் அச்சத்துடனும் ஆதரவற்ற உணர்வுடனும்தான் வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியாவின் குடியரசுத் தலைவராக ஒரு பழங்குடியினத்தவர், அதிலும் பெண் இருப்பது பெருமைக்குரியதுதான். ஆனால், அதை மட்டும் சொல்லிக்கொண்டே, பழங்குடி மக்களை அவர்களின் வாழ்விடங்களிலிருந்தும் வாழ்வாதாரமான மலைகளிலிருந்தும் அப்புறப்படுத்தும் வகையில் வனப் பாதுகாப்புச் சட்டத்தில் திருத்தம் செய்திருப்பதும், வன உரிமைச் சட்டம் 2006ஐ அமல்படுத்தாமல் இருப்பதன் மூலம் எட்டுக் கோடிப் பழங்குடியினருக்கும் பாதகம் செய்வதும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டம் 1989-ஐப் பெயரளவில் மட்டுமே நடைமுறைப்படுத்திக் கொண்டிருப்பதும் எந்த விதத்தில் நியாயம்? இந்த நிலை, ஆட்சியாளர்களுக்குப் பெருமை சேர்க்கக் கூடியதல்ல. பழங்குடிகள் கோரிக்கைவிடுப்பது, எங்களுக்கான உரிமைகளை, சமூகத்துக்கான உரிமைகளை மதித்து நடந்துகொள்ளுங்கள் என்பதே.

ஆகஸ்ட் 9: பன்னாட்டுத் தொல்பழங்குடிகள் நாள்

# விபரீத விளையாட்டுகள்: தடைசெய்ய வேண்டிய அபாயம்

சென்னை அருகே நடைபெற்ற இருசக்கர வாகனப் பந்தயத்தின்போது நிகழ்ந்த விபத்தில், 13 வயதுச் சிறுவன் உயிரிழந்த சம்பவம் அதிர்ச்சியையும் வேதனையையும் தருகிறது. ஆபத்து நிறைந்த போட்டிகளில் சிறார் ஈடுபடுத்தப்படுவதை அனுமதிப்பது சரியா என்னும் கேள்வியையும் இந்தச் சம்பவம் எழுப்பியிருக்கிறது.

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அருகே உள்ள இருங்காட்டுக்கோட்டையில், சென்னை மோட்டார் விளையாட்டு கிளப் சார்பில் 12 முதல் 17 வயதுக்கு உட்பட்டவர்களுக்கான இருசக்கர வாகனப் போட்டிகள் நடைபெற்றன. ஆகஸ்ட் 5ஆம் தேதி நடைபெற்ற போட்டியில் கலந்துகொண்ட ஷ்ரேயாஸ் ஹரீஷ் (13), முதல் சுற்றின்போது இருசக்கர வாகனம் சறுக்கியதால் விழுந்தார். தலைக்கவசமும் கழன்று விழுந்த நிலையில், அவருக்குப் பின்னால் வேகமாக வந்த வாகனங்கள் மோதியதில் தலையில் பலத்த காயம் ஏற்பட்டு, மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியிலேயே மரணமடைந்துவிட்டார்.

ஷ்ரேயாஸ் ஹரீஷ், இந்திய பைக் பந்தய உலகில் மிக மிக முக்கியமான வீரர் எனப் புகழ்பெற்றவர். பெங்களூருவில் உள்ள கென்ஸ்ரி பள்ளியில் எட்டாம் வகுப்பு படித்துவந்தவர். மே மாதம் ஸ்பெயினில் நடந்த எஃப்.ஐ.எம். மினி ஜிபி (FIM MiniGP) உலகக் கோப்பை இறுதிப்போட்டியை எட்டிய முதல் இந்திய வீரர் எனும் பெருமைக்குரியவர். எதிர்காலத்தில் சர்வதேச இருசக்கர வாகனப் பந்தயங்களில் வெற்றிகளைப் பெற இந்தப் போட்டி சிறார்களை ஊக்குவிக்கும் எனச் சொல்லப்படுகிறது.

இந்தத் துயரச் சம்பவம் தொடர்பாக இயல்பாக எல்லோருக்கும் எழும் கேள்வி, சிறுவர்களுக்கென இருசக்கர வாகனப் பந்தயம் எப்படி அனுமதிக்கப்படுகிறது என்பதுதான். பொதுவாக, 18 வயது நிரம்பியவருக்குத்தான் இருசக்கர வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் வழங்கப்படுகிறது. ஆனால், இதுபோன்ற பந்தயங்களில் கலந்துகொள்ளும் சிறாருக்கு, இந்திய மோட்டார் வாகனப் பந்தய விளையாட்டு கிளப்களின் கூட்டமைப்பான எஃப்.எம்.எஸ்.சி.ஐ. உரிமம் வழங்குகிறது.

எந்த வகையில் பார்த்தாலும், இருசக்கர வாகனப் பந்தயங்கள் நிச்சயம் சிறாருக்குப் பொருத்தமானவை அல்ல. எவ்வளவு பாதுகாப்பு ஏற்பாடுகள் இருந்தாலும் விபத்து அபாயம் மிக்க இந்தப் போட்டிகள், உடல் பாகங்களில் காயம் ஏற்படுத்துவது முதல் உயிரிழப்பு வரை பல விபரீதங்களுக்கு வழிவகுப்பவை.

சாலை விதிகள் குறித்த கவலை இல்லாமல் இளம் வயதிலேயே வாகனங்களை இயக்கும் சிறாரைப் பல இடங்களில் காண முடிகிறது. தங்கள் பிள்ளைகள் மீதான பாசத்தில், அதிவேக ஆற்றல் கொண்ட இருசக்கர வாகனங்களை வாங்கித்தரும் பெற்றோருக்கும் இதில் பங்கு உண்டு. இது தவிர பள்ளி, கல்லூரி மாணவர்கள் சட்டவிரோதமாக சாலைகளில் இருசக்கர வாகனப் பந்தயத்தில் ஈடுபடுகிறார்கள். இதனால் பல விபத்துகளும் நேர்ந்திருக்கின்றன.

உச்ச நீதிமன்றம் பரிந்துரைத்த வழிகாட்டு நெறிமுறைகளின்படி, வாகனங்களை இயக்கி சிறார்கள் பிடிபட்டால் சம்பந்தப்பட்ட பெற்றோருக்கு அபராதம் விதிக்கப்படுகிறது. புதிய மோட்டார் வாகனச் சட்டத்தின்படி அபராதமும் தண்டனையும் மேலும் கடுமையாக்கப்பட்டிருக்கின்றன. இப்படியான சூழலில், சிறாருக்கெனப் பிரத்யேகமாக இருசக்கர வாகனப் பந்தயங்கள் நடத்தப்படுவது முறையற்றது. இப்படிப்பட்ட ஆபத்தான பந்தயங்களை தடைசெய்ய அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.